Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 299

வியாழக்கிழமை 21 செப்ரெம்பர் 2023

புரட்டாதி 0



# திலீபன் நினைவேந்தலுக்கு யாழில் தடைவிதிக்க மறுப்பு

## பொலிஸாரின் மனு நீதிமன்றால் தள்ளுபடி

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 21**

**தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலுக்குத் தடைகோரி யாழ்ப்பாணம் பொலிஸார் தாக்கல் செய்த மனுவை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.** »11

## தியாகதீபம் திலீபனுக்கு மக்கள் திரண்டு அஞ்சலி

வவுனியா, செப்.21

தியாகதீபம் திலீபனினுக்கு வவுனியாவில் மக்கள் உணர்வெழுச்சியுடன் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

தியாகதீபம் திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்தி வவுனியா ஊடாகப் பயணித்தது. நெடுங்கேணி, புளியங்குளம், ஓமந்தை, வவுனியா நகரம், குருமன்காடு, தாண்டிக்குளம், »09



## யாழ். பல்கலைக்கழகச் சூழலில் போதைப்பாவனை அதிகரிப்பு

### மாவட்டச் செயலகக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப்.21

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகச் சூழலில் போதைப்பாவனை அதிகரித்துள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடந்த கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்தவாரம் யாழ்ப்பாணம் »09

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் அரச அதிகாரிகள் சிக்கலில்

கொழும்பு, செப்.21

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் தீர்மானத்துக்கு இணங்காத சில அரசாங்க அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை »11

## இலங்கை அபிவிருத்திக்கு அமெரிக்கா 19 மில். டொலர்

கொழும்பு, செப்.21

இலங்கையின் அபிவிருத்திக்காக 19 மில்லியன் »09

## துன்னாலையில் குழு மோதல் இருவர் வாள்வெட்டில் காயம்

யாழ்ப்பாணம், செப்.21

வடமராட்சி, துன்னாலையில் இரு குழுக்களுக்கு இடையே நடந்த மோதலில் இருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். »11

## விபத்தில் இளைஞர் படுகாயம்

யாழ்., செப்.21

நெல்லியடி, குஞ்சர் கடையடிச் சந்தியில் நேற்று வியாழக்கிழமை நடந்த விபத்தில் »11

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை இன்று விசேட அறிவிப்பு

கொழும்பு, செப்.21

க.பொ.த. உயர்தரப் பரீட்சை தொடர்பான விசேட அறிவிப்பு ஒன்று இன்று வியாழக்கிழமை வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். »11

## மின்சாரசபை ஊழியர்களும் விரைவில் போராட்டம்!

கொழும்பு, செப்.21

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர். ஆயினும்போராட்டம் எப்போது »11

## காணிப் பிரச்சினைத் தீர்வை கவனிக்காதிருக்கிறது அரசு!

### ரத்ன தேரர் எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, செப்.21

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிப் பிரச்சினைகளுக்கு காணி ஆணைக்குழு ஊடாகத் தீர்வு காணவேண்டும் என்று ஜனாதிபதியிடம் பல தடவைகள் வலியுறுத்தி »11

## வெற்றுக் காணிக்கும் வரவிருக்கின்றது வரி!

கொழும்பு, செப்.21

வெற்றுக் காணிகளாக உள்ள விவசாயக் காணிகளுக்கு விசேட வரி »11

சீனக்கப்பல்கள்

## உளவு பார்க்க வரவில்லை; ஆய்வு செய்யவே வருகை!

### நியூயோர்க்கில் ரணில் விளக்கம்

நியூயோர்க், செப்.21

உளவு பார்க்கும் நோக்கத்துடன் இலங்கைக்குக் கப்பல்கள் எவையும் வரவில்லை. ஆராய்ச்சிப் பணிகளுக்காகவே வருகின்றன. அது சில நாடுகளால் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகின்றது. சீனா, இலங்கை மீது ஆதிக்கத்தைச் செலுத்தவில்லை. »11

## சுகாதாரத்துறை போர்க்கொடி

### அரசாங்கத்துக்கு எதிராக நாளை பெரும் போராட்டம் என அறிவிப்பு

கொழும்பு, செப்.21

அரசாங்கத்துக்கு எதிராக நாளை வெள்ளிக்கிழமை பெரும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்களும், ஏனைய சில தொழிற்சங்கங்களும் அறிவித்துள்ளன.

"சுகாதார சேவைகள் ஆபத்தில்" என்ற தொனிப்பொருளில் இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்று சுகாதார சேவைகள் ஒன்றியத்தின் »11

## டிப்பர் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு!



»11

## நாகப்பட்டினம் – காங்கேசன் கப்பல் சேவை ஒக்ரோபரில்?

கொழும்பு, செப்.21

நாகப்பட்டினம் - காங்கேசன்துறைக்கு இடையிலான கப்பல் போக்குவரத்து அடுத்தமாதம் முதல் ஆரம்பமாகும் என தமிழ்நாடு பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்துள்ளார். »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் அமைப்பிலிருந்தாலும் அகிம்சை வழியில் உயிர்துறந்தவர்

## திலீபனுக்கு தயாசிறி புகழாரம்



கொழும்பு, செப். 21

**திலீபன் புலிகள் அமைப்பில் இருந்தாலும், அகிம்சை முறையிலேயே அவர் தனது உயிரைத் தியாகம் செய்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திலீபன் நினைவேந்தலுக்குத் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவு வழங்கியுள்ளது என இன்று (நேற்று) பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன. திலீபன் என்பவர், புலிகள் அமைப்பில் இருந்தாலும் மிகவும் அமைதியான முறையிலேயே அவர் தனது உயிரைத் தியாகம் செய்தார். இது வேறு விடயம்.

ஆனால், திலீபன் உருவப்படம் தாங்கிய வாகனப் பேரணி மட்டக்களப்பில் ஆரம்பமாகி, திருகோணமலைக்கு தம்பலகமுவ என்ற சிங்களக் கிராமத்தைக் கடந்தே வந்துள்ளது. புலிகளால் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் அந்த ஊரில் வாழ்கின்றனர். அந்தப் பேரணிவரும்போது அந்த மக்களுக்கு வேதனை ஏற்பட்டிருக்கும். இதனால்தான் வாகனப் பேரணி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஆனால் தாக்குதல் நடத்தப்பட்டதை நான் அனுமதிக்கப்போவதில்லை.

திலீபன் நினைவேந்தலுக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அந்தத் தாக்குதலையும் நான் அனுமதிக்கப்போவதில்லை. மட்டக்களப்பில் இருந்து திருமலைவரை பேரணி வர பொலிஸார் அனுமதி வழங்கியது ஏன்? திருகோணமலை செல்வதற்கு மாற்றுவழி இருந்தும், சிங்கள மக்களை உசுப்பேத்துவதற்காகவே தம்பலகமுவ ஊடாக இந்தப் பேரணி சென்றுள்ளது. தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் முறுகலை ஏற்படுத்துவதற்காக செய்யப்பட்ட சூழ்ச்சியா இது? இந்தச் சம்பவம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (ஓ-44)



# வவுனியா பல்கலையில் திலீபனுக்கு அஞ்சலி!

வவுனியா, செப். 21

வவுனியா பல்கலைக்கழகத்தில் தியாகதீபம் திலீபனுக்கு நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயகப் பகுதிகளிலும், புலம்பெயர் தேசங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

உண்ணாவிரதத்தின் ஆறாம் நாளை முன்னிட்டு வவுனியா பல்கலைக்கழகத்தில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம-18)

# முட்டை மற்றும் இறைச்சியின் விலை அதிகரிக்கப்படமாட்டாது

கொழும்பு, செப். 21

முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலைகளை எதிர்காலத்தில் அதிகரிப்பதற்கான எந்தத் திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட முட்டை தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முட்டை இறக்குமதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இறக்குமதியைத் தொடரும் திட்டம் எதுவும் இல்லை. அதற்குப் பதிலாக உள்ளூர் முட்டை மற்றும் கோழி உற்பத்தியை அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

முட்டை விலையை சிலர் உயர்த்த முயற்சிப்பதை நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

ஆனால், விலைகளை அதிகரிக்க அரசாங்கம் அனுமதிக்காது. கோழி இறைச்சியின் விலையிலும் இதையே கடைப்பிடிக்கிறோம். கோழி இறைச்சியின் விலையையும் அதிகரிக்க விடமாட்டோம் - என்றார். (ஓ-இ)

# இலங்கையின் மேம்பாட்டு திட்டங்களில் 'ஏ.ஐ.' நுட்பம்

## மெட்டா நிறுவனத்துடன் ரணில் ஆராய்வு



கொழும்பு, செப். 21

இலங்கையின் கல்வித்துறை அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றத்தை தணித்தல் உள்ளிட்ட திட்டங்களுக்கு செயற்கை நுண்ணறிவுத் துறையை மேம்படுத்துவது குறித்து மெட்டா நிறுவனத்துடன் ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தை உருவாக்க எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் நியூயோர்க் மெட்டா நிறுவனத்தின் உலகளாவிய விவகாரங்களுக்கான தலைவர் நிக்கிளெக் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம்நியூயோர்க்கில் இடம்பெற்றது.

இதன்போது இணையத்தளம் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் வெறுப்பு பேச்சு மற்றும் போலிச் செய்திகளை மட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் புதிய நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுத்துக் கூறினார்.

மேலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத் துறை மேம்பாட்டுக்காக இலங்கையின் திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரிவாக விளக்கமளித்தார். இலங்கைப் பல்கலைக்கழகங்களின் அபிவிருத்திக்காக மெட்டா நிறுவனத்துடன் ஒத்துழைப்பு வேலைத் திட்டத்தை உருவாக்க எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

காலநிலை மாற்றத்தைத் தணிப்பது தொடர்பில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்கு செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வித்துறையில் செயற்கை நுண்ணறிவுத் துறையைப் பயன்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடலில் அவதானம் செலுத்தப்பட்டது. (ச-இ)

# ரூ. 709 மில்லியன் பயனாளிகள் கணக்கில் வைப்பு

'அஸ்வெசும' பயனாளர்களின் கணக்கு உறுதிப்படுத்தப்பட்ட ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 713 பேருக்கு ஜூலை மாதத்துடன் தொடர்புடைய 709.5 மில்லியன் ரூபா வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

11 லட்சத்து 62 ஆயிரத்து 245 பயனாளர் குடும்பங்களுக்கு ஏற்கனவே ஜூலை மாதத்துக்காக தலா 7 ஆயிரத்து 278 ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான கணக்கெடுப்பு முடிந்ததும் அனைத்துப் பயனாளிகளுக்கும் பணம் வழங்கப்படும் என்றும் அமைச்சர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ஓ-இ)

# சதொசவில் விலைகுறைப்பு

கொழும்பு, செப். 21

சதொச நிறுவனம் ஆறு அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை மீண்டும் குறைத்துள்ளது.

சிவப்பு பருப்பு கிலோ ஒன்றின் விலை 6 ரூபாவால் குறைக்கப்பட்டு 299 ரூபாவாகவும், பெரிய வெங்காயம் கிலோ ஒன்றின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டு 195 ரூபாவாகவும், வெள்ளைப்பூண்டு கிலோ ஒன்றின் விலை 25 ரூபாவால் குறைக்கப்பட்டு 620 ரூபாவாகவும், 100 கிராம் நெத்தலியின் விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டு 100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளன.

இதேவேளை உருளைக்கிழங்கின் விலை 40 ரூபாவாலும், சோயாமீற்றின் விலை 45 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதாக சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஓ-இ)

# 'பற்றி கம்பஸ்' ஹிஸ்புல்லாவிடம்

மட்டக்களப்பு மாவட்டம் ஜெயந்தியாயவில் அமைந்துள்ள 'பற்றி கம்பஸ்' நேற்று விடுவிக்கப்பட் டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த இந்தக் கல்வி நிலையம், இஸ்லாமிய பயங்கரவாதத்தை ஊக்குவித்ததாக குற்றம்சாட்டப் பட்டிருந்தது. இந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புக்கு அமைவாக கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவிடம் நேற்று அது ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஓ-இ)

# எதிர்காலத்தில் கிராம அலுவலர்களும் வன அதிகாரிகளாக செயலாற்றலாம்

கொழும்பு, செப். 21

புதிய வனக்கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் கிராமஅலுவலர்களுக்கும் வன அதிகாரிகளாக செயற்படுவதற்கான அதிகாரங்களும் பணிகளும் வழங்கப்படும் என வன உயிரிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

புதிய வனக்கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், அதற்கான யோசனைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார். (ஓ-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மறைக்கப்பட்ட உண்மைகள் வெளிக்கொண்டுவரப்படவேண்டும்

## ஹக்கீம் கோரிக்கை

**கொழும்பு, செப். 21**

**பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக மறைக்கப்பட்ட உண்மைகளை உடன் வெளிக்கொண்டுவர வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற விசேட குழுக் கூட்டத்தின்போதே ரவூப் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார். இந்தக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அவர் மேலும் கூறியதாவது:-

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகளை முஸ்லிம் சமூகம் நினைவுகூருவதில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தாரிகளைக் கண்டறிவதற்கான முதல் அடியை எடுத்து வைத்ததே முஸ்லிம் சமூகம்தான்.

இதன் உண்மைத் தன்மையை இந்த விசேட குழு அங்கீகரித்தமை மகிழ்ச்சியளிக்கிறது - என்றும் தெரிவித்தார். (ஒ-இ)



## முருங்கைக்காய் விலை திடீர் சரிவு

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். குடாநாட்டில் முருங்கைக்காயின் விலைசடுதியாகச் சரிந்ததனால் அவை விற்பனையின்றி தேங்கியுள்ளன என்று வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போதைய வெப்பகாலநிலைக்கு முருங்கைக்காய் அதிகளவில் விளைவதால் அவற்றின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.

சந்தைகளில் முருங்கைக்காய் கிலோ 75 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் அவை விற்பனையின்றி கால்நடைத் தீவனத்துக்கே பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் வியாபாரிகள் கவலை தெரிவித்தனர். (ச-17-9)

## உள்ளூர்க் கலப்பின சோளம் வவுனியாவில் அறுவடை

வவுனியா, செப். 21

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு பயிரிடப்பட்ட உள்ளூர்க் கலப்பின சோளத்தின் அறுவடை வயல்விழா நேற்றுப் புதன்கிழமை வவுனியா புளியங்குளத்தில் இடம்பெற்றது.

குறைந்தளவான நிலப்பரப்பில் அதிகளவில் பயிரிடக்கூடிய குறித்த கலப்பின சோளம் பரீட்சார்த்த முறையாக மேற்கொள்வதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு மாகாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தால் வழங்கப்பட்டு திணைக்களத்தின் மேற்பார்வையில் பயிரிடப்பட்டது.

இதன் அறுவடை விழா புளியங்குளத்திலுள்ள விவசாயி ஒருவரின் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் சிறப்புற்றது. நிகழ்வில் மாகாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனையின் பாடவிதான உத்தியோகத்தர்களான அ. சுஜேந்திரா, கு. கஜேந்திரன் உட்பட கிராமஅலுவலர், விவசாயிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-27)

## சவுத்பார் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி!

### ஐவர் கைது

மன்னார் சவுத்பார் கடற்கரைப் பகுதியில் சட்டவிரோத வெடிமருந்தான ஜெல் குச்சிகளைப் பயன்படுத்தி மீன்பிடிக்க முயற்சித்த குற்றச்சாட்டில் 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் கடற்றொழில் உதவிப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய கடற்படைப் புலனாய்வு அலுவலர்கள் மற்றும் மன்னார் கடற்றொழில் அலுவலர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுத்த களஆய்வின்போதே இவர்கள் கைதாகினர்.

அவர்களிடமிருந்து 13 வாட்டர் ஜெல் குச்சிகள் மற்றும் மீன்பிடிக்குப் பயன்படுத்திய டிங்கி படகுகள் என்பன கைப்பற்றப்பட்டன. சான்றுப்பொருள்களுடன் சந்தேகநபர்கள் மேலதிக சட்டநடவடிக்கைக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று மன்னார் கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-60)

## பொலிஸாருக்கு மிரட்டல்; பேருந்துச் சாரதிக்குப் பிணை

யாழ்ப்பாணம், செப். 21

வீதிப்போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொலைமிரட்டல் விடுத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட தனியார் பேருந்துச் சாரதியைப் பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்று அனுமதித்தது.

கடந்தவாரம் மந்திகைச் சந்தியில் மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பருத்தித்துறையில் இருந்து மல்லாவி நோக்கிச் சென்ற தனியார் பேருந்தை வீதிக்கடமையிலிருந்த பொலிஸார் மறித்து வீதி ஒழுங்குகளை முறைப்படி பின்பற்றிச் செல்லுமாறு அறிவுறுத்தினர். அதன்போது சாரதி, பொலிஸாருக்கு கொலைமிரட்டல் விடுத்து பேருந்தை எடுத்துச்சென்ற நிலையில் அவர் மடக்கிப் பிடித்து கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் நேற்று புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது. (ச-100)

## மன்னாரில்

# ரூபா 30 மில்லியன் பெறுமதியான கொக்கெய்ன் மீட்பு

தாழ்வுபாடு இராஜப்பு ஜோசப் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் உலகிலேயே மிக விலை உயர்ந்த உயிர்கொல்லி போதைப்பொருளான கொக்கெய்ன் மீட்கப்பட்டுள்ளது. அதனை உடைமையில் வைத்திருந்த சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளார். மன்னார் பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது 1 கிலோ 12 கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது. அதனை உடைமையில் வைத்திருந்தமைக்காக தாழ்வுபாட்டைச் சேர்ந்த 34 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன் பெறுமதி 30 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (ச-213)




**சி**ங்களவர் வந்து எங்கட காணியளைப் பிடிக்கிறாங்கள் எண்டு எல்லைப்புறக் கிராமங்களில கொதிச்சு எழும்பிறம். ஆனால் எங்கட ஆக்களே எங்கட காணியளைக் கண்ணுக்கு முன்னால ஆட்டையைப் போட்டு, லட்சக்கணக்கில மோசடி செய்யிறதைப் பற்றிப் பெரிசா ஒருத்தரும் அலட்டிக் கொள்ளுறேலை. ஒருகாலத்திலையும் இல்லாதளவுக்கு இப்ப காணிமோசடியள் இஞ்ச மலிஞ்சு போட்டுது. தனியாரின்ர காணியை மட்டுமில்ல, அரச காணியையே ஆட்டையைப் போடுறளவுக்கு புத்திசாலிகள் கூடிட்டினம்.

ஒரு இடத்தில ஆரும் ஒரு தனியாரின்ர காணியோட சேர்ந்து பக்கத்தில அரசகாணியும் இருந்தால், அதில காணிப் புறோக்கர்மார் கண்வைச்சிடுவினம். அந்தக் காணியை வாங்கமுதல், அந்தத் தனியார் காணிக்குச் சொந்தக்காரரிட்ட போய் 'உங்கட காணியை நாங்கள் வாங்கிறம், ஆனால் ஒரு வேலை செய்து தரவேணும்' எண்டு நிபந்தனை போடுவினம். புறோக்கர் சொன்னபடி தனியார் காணிக்காரர், 'என்ர காணியை சரியா அடையாளம் காணமுடியேலை. பக்கத்தில உள்ள அரசகாணிக்குள்ளயும் இந்தக் காணிக்கான 'சொரியல்' இருக்கு. அதால என்ர காணி எது எண்டு கண்டுபிடிக்கவேணும்' எண்டு காணிக்கந்தோரில அறிவிப்பார். அவையும் காணியின்ர படத்தைக் கொண்டுவரச் சொல்லுவினம். காணிக்காரரும் அரசகாணியையும் தன்ர காணியோட சேர்த்து படம் கீறிக்கொண்டுபோய் குடுப்பார். அவையும் அதுதான் அவரின்ர காணி எண்டு உறுதிப்படுத்திப் போடுவினம். பிறகு அதை புறோக்கர் வாங்கி, ஆடடிச்சு பங்கு போடுறமாதிரி அந்தக் காணியை தான் வாங்கி சின்னச் சின்னத் துண்டாப் பிரிச்சு வித்துப்போடுவார். தனியார் காணியின்ர பதிவிலயே அரச காணியையும் கலந்து வித்தால் அதைக் கண்டுபிடிக்கிறது கடும் கஷ்டமாம்.

இதைவிட வெளிநாட்டில உள்ளவையின்ர காணியளுக்கு கள்ள உறுதி முடிச்சு அதுகளை விக்கிற யாவாரமும் நல்லா நடக்குது. வெளிநாட்டில இருக்கிறவை தங்கட ஊருக்கு திரும்பி வரேக்க இப்பிடி தங்கட காணிக்கை வேற ஆரோ இருக்கிறதைக் கண்டிட்டு சண்டை பிடிக்கேக்கதான், இந்தக் கள்ள உறுதி விசயம் இரண்டு பகுதிக்கும் (வெளிநாட்டாலை வந்தவைக்கும், காணியை வாங்கினவைக்கும்) தெரிய வருகுதாம். அதுக்குப் பிறகு கேஸ் போட்டாலும் அது வருசக்கணக்கில இழுபட்டுக் கொண்டே போகுமே தவிர, காணி திரும்ப உரியவையின்ர கையுக்குப் போறதுக்கு கனகாலம் எடுக்கும். காணியின்ர சொந்தக்காரரும், அதை வாங்கினவையும் தான் இந்தக் கேஸில அலைஞ்சு திரிவினம். ஆனால் காணியை ஆட்டையைப் போட்டு வித்த ஆளோ, கள்ள உறுதி முடிச்சுக் குடுத்தவையோ நல்ல லாபம் பாத்திட்டு அடுத்த காணியை ஆட்டையைப் போட அந்தப் பக்கமாக போடுவினம். உண்மையில இந்தக் காணி மோசடியளைத் தடுக்கிறதுக்கு ஒரேயொரு வழிதான் இருக்கு. காணியை எழுதிற புறக்கிராசிமாரை (நொத்தாரிசு) கண்காணிப்பு வளையத்துக்க வைச்சிருக்க வேணும். அப்பதான் அவையும் இப்பிடியான கள்ள உறுதி முடிக்கிற விசயங்களுக்குப் போகாமல் இருப்பினம். அப்பிடிச் சிலரைப் பொலிஸ்காரர் தங்கட வளையத்துக்க கொண்டந்திட்டினம் எண்டும் கதை. கெதியில சில கள்ள உறுதிக்காரர் பிடிபடுவினம் எண்டு பட்சி சொல்லுது.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## யாழ். இந்துவில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால் முன்னெடுக்கப்படும் குருதிக்கொடை முகாம் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

ஆர்வமுள்ளோர் பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-இ)

## கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 21

கவிஞர் இரா.ஜெயக்குமார் எழுதிய 'இன்னும் எத்தனை காலமோ?' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு உரும்பிராய் அருள்மிகு கற்பக விநாயகர் மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உரும்பிராய் ஞானவைரவர் சனசமூக நிலைய உபதலைவர் சிவஸ்ரீ ந.பிரபு தேவக்குருக்கள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணன் பங்கேற்கவுள்ளார். (ச)

## காட்டுமிராண்டித்தனம் தலைவிரித்தாடுகிறது!

### சஜித் தெரிவிப்பு

நாட்டில் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் தலைவிரித்தாடுகின்றன. எனவே மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு ஆபத்துக்குள்ளாகியுள்ளது. நாடு முழுவதும் கொலைகள், கொள்ளைகள், ஊழல்கள், தாக்குதல்கள் போன்றவை தொடர்ந்தும் பதிவாகிவருகின்றன. இதன் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் வாழ்க்கை பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்.

இதுபோன்ற அநாகரீக செயல்களை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் போலவே 220 லட்சம் மக்களின் உயிர்களையும் பாதுகாக்க வேண்டும்' - என்றார். (ம-44)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். முக்கியமான முடிவுகளைத் தவிர்த்து விடவும். பொறுமையை கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும். உறவினர்களால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் இடையூறுகளும் நீங்கும். பிரச்சினைகள் இருக்காது.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். ஏற்பட்டிருந்த மனக்கசப்புகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியம் அனுகூலமாக முடியும். அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மனஸ்தாபம் ஏற்படக் கூடும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எதுவும் இன்று எடுக்க வேண்டாம்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தொடங்கவும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. திடீர்ச் செலவுகளும் ஏற்படும்.

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணம், கோண்டாவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் நடேசு தயாளன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸ் பங்கேற்கவுள்ளார். (ச)

### ரைகொண்டோ போட்டி

## மடு கல்வி வலய மாணவி முதன்முறையாக வெள்ளி

மன்னார், செப். 21



தேசிய மட்ட விளையாட்டுகளில் ரைகொண்டோ போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடம்பிடித்து வெள்ளிப் பதக்கம் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார் மடு கல்வி வலய மாணவி லக்சாயினி.

பாடசாலைகளிடையே நடைபெற்றுவரும் தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகள் கொழும்பில் நடைபெற்று வருகின்றன. இதில் ரைகொண்டோ போட்டியில் முதன்முதலாக மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் மகாவித்தியாலயத்தின் மாணவி லக்சாயினி பங்கேற்று தேசியமட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கியுள்ளார். மடுகல்வி வலயத்துக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்த மாணவிக்கு பாடசாலைச் சமூகம் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது. (ச-213)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், செப். 21

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

கல்லூரி அதிபர் திருமதி ஸ்ரீரதி முருகசோதி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலயக் கல்வி அபிவிருத்திப் பிரிவுப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.பாலராஜ், யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் து. சுபோதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-66-17)

## வதிரிபீட விநாயகர் ஆலய பரிபாலனசபை தெரிவு

யாழ்ப்பாணம், செப்.21

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்துக்குப் புதிய பரிபாலன சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆலய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மூன்று ஆண்டு காலத்துக்கான புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது.

அதன்படி தலைவராக மு.பிரணவன், உபதலைவராக பொ.சிவப்பிரகாசம், செயலாளராக பரா.சாந்தகுமார், உப செயலாளராக பா.நந்தகுமார், பொருளாளராக ந.காண்டீபன் உட்பட பத்து நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-17)

## நிர்வாகத் தெரிவு

கரணவாய் மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.றவிகரன் தலைமையில் கடந்த 9ஆம் திகதி சனிக்கிழமை மூத்த விநாயகர் மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்குறித்த சங்கத்தின் தலைவராக பட்டய அளவையாளர் கே.ரி.சிறீஸ்கந்தசிங்கம், செயலாளராக இளைப்பாறிய அதிபர் கே.இராமஜயம் (எம்.ஏ.), பொருளாளராக இளைப்பாறிய முகாமையாளர் என்.தவராசா உட்பட 9 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். (ம)

## யாழ்ப்பாணம், நல்லூரில் கண்புரையாளர் தெரிவு

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணம், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலுள்ள கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவையுள்ள நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண் பரிசோதனை முகாம் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட நோயாளர்களுக்கு யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலும் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த நோயாளர்களுக்கு அரியாலை நாவலடி ஆரம்ப சுகாதார நிலையத்திலும் நடைபெறவுள்ளது. தேவையுடையோர் பரிசோதனை முகாமில் பங்கேற்றுப் பதிவுகளைச் செய்யுமாறு யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். (ச-20-100)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விலாங்குகளே வியக்கும் ரணிலின் அரசியல்

இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கையை, 'விலாங்குமீன் விளையாட்டு' என்று வர்ணிப்பதுண்டு. பாம்பு வந்தால் 'நான் உன் ஆள்' என்பதுபோன்று பாம்புக்கு வாலையும், மீன் வந்தால் 'நான் உன் ஆள்' என்பதுபோன்று மீனுக்குத் தலையையும் காட்டுவதுதான் விலாங்குகளின் குணாம்சம். அதுபோல்தான் சீனாவுக்குச் சென்றாலோ அல்லது சீனப் பிரதிநிதிகள் வந்தாலோ ஜனாதிபதி ரணில் சீனச்சார்புக் கொள்கைகளை வரித்துக் கொண்டு தன் கருத்துகளைப் பதிவுசெய்வார். அதேபோல் இந்தியாவுக்குச் சென்றாலோ அல்லது இந்தியப் பிரதிநிதிகள் வந்தாலோ இந்தியச் சார்பு நிலைப்பாடுகள் ஜனாதிபதியினதும் அரச உயர்மட்டங்களினதும் செயற்பாடுகளில் நடத்தைகளில் எதிரொலிக்கும். இதை வெளிப்படையாகவே அவதானிக்கக்கூடியதாகவும் இருக்கும்.


ஆனால் இப்போது விலாங்குகளே வியக்கும்படியான அரசியலை—அணிசேர் கொள்கைகளை—முன்னெடுத்திருக்கின்றார் ரணில். 'நாம் சீனாவுடனும் சேரப்போவதில்லை, இந்தியா பக்கமும் சாயப் போவதில்லை ' என்றவாறாக அமெரிக்காவில் வைத்து அவர் தெரிவித்திருக்கின்றார். ஒரு பிராந்தியத்தில் தன் ஆதிக்கத்தை வலுப்படுத்த வேண்டுமாயின் அந்தப் பிராந்தியத்தில் உள்ள ஒரு நாட்டை வளைத்துப்போடுவது அமெரிக்காவின் அரசியல். மத்திய கிழக்கில் ஈரானையும் துருக்கியையும் கையாள்வதற்காக இஸ்ரேல், தென்சீனக் கடற்பரப்பில் தாய்வான், ரஷ்யாவைக் கையாள்வதற்கு உக்ரைன் என ஏகப்பட்ட உதாரணங்களை அமெரிக்காவின் இந்த அரசியலுக்குச் சொல்லிக்கொண்டே போகலாம். இதனால் இலங்கையின் அமைவிடத்தை அமெரிக்கா ஒரு வரமாகவே நோக்கும். ஏனெனில், இந்தியாவையும் சீனாவையும் இணைந்தாற்போல கையாள்வதற்கான அமைவிடத்தைப் பெற்றிருக்கின்றது இலங்கை. இவ்வாறானதொரு பின்னணியில்தான் தனது ஆசிய வல்லரசுகளுடனான அணிசேராக் கொள்கையைப் பட்டவர்த்தனமாக்கியிருக்கின்றார்.

'இந்திய ஆதரவாளனா? அல்லது சீன ஆதரவாளனா? என்று பலர் என்னிடத்தில் கேட்டார்கள். அதற்கு நான் 'எவருக்கும் ஆதரவாளன் இல்லை' என்றேன். பின்னர், 'நீங்கள் நடுநிலைவாதியா?' என்றனர். நான் 'நடுநிலைவாதியல்லன். இலங்கைக்குச் சார்பானவன்' என்று தான் சொன்னதாக ரணில் பதிவுசெய்திருக்கின்றார். ஆக, நடுநிலைக் கொள்கை என்பது கொழும்புக்கும் ரணிலுக்கும் இப்போது முக்கியமில்லை. இந்தியா மற்றும் சீனாவுக்கு மேலதிகமாக அமெரிக்காவையும் இலங்கை தாராளமாகவே அரவணைக்கப்போகின்றது என்பது இதிலிருந்து புலப்படுகின்றது. உண்மையில் இதுவொரு ஆபத்தான அறிவிப்பு.சீனாவுடையதும் இந்தியாவுடையதும் வல்லாதிக்கப் போட்டிகளால் இந்தத் தீவு படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. சீன ஆய்வுக்கப்பலொன்று வந்துசெல்லும் விவகாரம்கூட வல்லரசுகளின் இராஜதந்திரப் பதற்றத்துக்குரிய விடயமாக மாறியிருக்கின்றது. வெளிவிவகாரக் கொள்கையின் கீழ் ஒரு நாட்டையும், பாதுகாப்புத் துறையின் கீழ் பிறிதொரு நாட்டையும் 'குளிர்வித்துக்கொண்டிருக்கும்' கடைகெட்ட நிலையில், அமெரிக்காவும் தாராளமாக வந்துசெல்வதற்குரிய கொள்கைசார் அறிவிப்புகளை அமெரிக்காவில் வைத்து வெளியிடுவதெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு சேற்றில் குதிப்பது போலன்றி வேறொன்றுமில்லை.

நாளொரு நல்வார்த்தை

"உங்கள் வெற்றி என்பது, என்ன செய்கிறீர்கள் என்பதைவிட, உங்கள் கனவை எவ்வளவு காதலிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது."

– அன்னை தெரேசா




# திலீபனின் நினைவூர்தி சில்லறைத்தனமானதாம்

## பெரமுன கொதிப்பு

**கொழும்பு, செப். 21**

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அரசியலுக்காக சில்லறைத் தனமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அவர்கள் இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று பொது ஜன பெரமுன வலியுறுத்தியுள்ளது.**

பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன மேலும் தெரிவித்ததாவது:-

'வடக்கு - கிழக்கில் உள்ள சிலர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் இனவாதத்தைத் தூண்டி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முற்படுகின்றனர். திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகூட இதன் ஓர் அங்கம்தான். திலீபன் நினைவேந்தலுக்காக வாகனப் பேரணியை நடத்தி நாட்டில் பெரும் குழப்பத்தைத் தோற்றுவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன். மஹிந்தவின் புண்ணியத்தால் நாட்டில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. யார் வேண்டுமானாலும் எங்கும் பயணிக்கக்கூடிய அமைதி நிலவுகின்றது. எனவே, பாலில் சாணத்தைக் கலக்கும் வகையிலான செயலை அவர் செய்துள்ளார். அரசியலுக்காக சில்லறைத்தனமான செயல்களில் ஈடுபடுவதை கஜேந்திரன் நிறுத்தவேண்டும்' - என்றார். (ம-44)

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# விசாரணை அறிக்கைகளை உடன் அமுல்படுத்துங்கள்!

## சஜித் பிரேமதாஸ வலியுறுத்து

கொழும்பு, செப். 21

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் மூன்று அறிக்கைகள் உள்ளன. ஆதலால், அந்த மூன்று அறிக்கைகளின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் நேற்று கோரிக்கை விடுத்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கை, ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை மற்றும் மலல்கொட அறிக்கை போன்ற 3 அறிக்கைகளின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டும் நடவடிக்கையை ஆரம்பிக்கமுடியும். எனவே இதனைக் கருத்திற்கொண்டு குறித்த பரிந்துரைகளை அமுல்படுத்துமாறு வலியுறுத்துகின்றேன் - என்றார். (ம)

நாளை 22.09.2023 வெள்ளிக்கிழமை புரட்டாதி 05

சுபநேரம் : 06.02 – 07.32
ராகுகாலம் : 10.32 – 12.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுவன் அம்மன் ஆலயத்தை இராணுவத்திடமிருந்து பெற்றுத் தருக

## வடக்கு ஆளுநருக்கு கோயில் நிர்வாகம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், செப். 21**

**இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள கட்டுவன் முத்துமாரி அம்மன் ஆலயச் சூழலை விடுத்து மக்கள் வழிபாட்டுக்கு வழிவகுக்குமாறு ஆலய நிர்வாகத்தினர் வடக்கு மாகாண ஆளுநரிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இதுதொடர்பில் ஆளுநருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் மேலும் உள்ளதாவது:

1990 ஆம் ஆண்டு இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளான இங்குள்ள பல இடங்கள் விடுவிக்கப்பட்ட போதும் கட்டுவன் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயமும் அதன் குருவாசஸ்தலமும் ஆலயத்தைச் சூழவுள்ள பகுதியும் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

எனவே ஆலயத்தை இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுத்து மக்கள் வழிபாட்டுக்கு திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ச-159)




கிளிநொச்சி, செப். 21

கிளிநொச்சி, திருவையாறுப் பகுதியிலுள்ள வீடுகளுக்குள் உட்புகும் யானைகள் வாழ்வாதாரப் பயிர்களை அழித்துச் செல்கின்றன. அதனால் அச்சத்துடனேயே வாழ வேண்டியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

யானைகள் எமது குடியிருப்புக்குள் புகுந்து பயன்தரு மரங்களை அழித்து வருகின்றன.

நேற்றுமுன்தினம் குடிமனைக்குள் புகுந்த யானையொன்று வீட்டு முற்றத்திலுள்ள வாழைமரங்கள், மரவள்ளி உள்ளிட்ட வாழ்வாதாரப் பயிர்களை அழித்துச் சேதமாக்கியுள்ளது. யானைகளின் நடமாட்டத்தால் அச்சத்துடனே வாழ வேண்டியுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் உடன் நடவடிக்கை எடுத்து எமது வாழ்வாதாரத்தையும் வாழ்வையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-113)

## நெற்செய்கை

சாவகச்சேரி செப். 21

தென்மராட்சிப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கைக்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நெற்செய்கையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு முதல் பெய்த பெருமழையையடுத்து மேற்குறித்த ஆரம்பக் கட்டப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இந்த வருடம் ஆடி - ஆவணி மாதங்களில் மழை பெய்யவில்லை. நவம்பர் மாதத்தில் மழை பெய்யலாம் என வானிலை அவதான நிலையம் அறிவித்ததால் காலபோக நெற்செய்கைக்கான ஆரம்பக் கட்டப்பணிகள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ய-9)

### தீவகக் கல்வி வலயம் அசமந்தம்

# போட்டியில் பங்கேற்க திண்டாடிய மாணவி!

யாழ்ப்பாணம், செப். 21

தீவகக் கல்வி வலயத்தால் மாகாணமட்டப் போட்டி தொடர்பான தகவல் வழங்கப்படாமையால் நெடுந்தீவு மாவிலித்துறை றோ. க. த. க. வித்தியாலயத்தைச் சேர்ந்த, வலயத்தில் பேச்சுப்போட்டியில் முதலாம் இடம்பெற்ற மாணவியொருவர் மாகாண மட்டப் போட்டிக்கு பங்கேற்பதில் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளார் என்று மாணவியின் பெற்றோர் குற்றஞ்சுமத்தியுள்ள னர்.

குறித்த மாணவி பேச்சுப்போட்டியில் தீவக வலயமட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவானார். மாகாண மட்டப் போட்டி கடந்த 16 ஆம் திகதி யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியில் இடம் பெற்றன.

ஆனால் குறித்த போட்டிக்கான அறிவித்தல் மாணவிக்கு போட்டி நடைபெறும் நாளன்றே (காலை 8 மணிக்கே) தெரியவந்தது. இதனால் அவர் நெடுந்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்கான 7 மணி படகை தவறவிட்டிருந்தார். பின்னர் கடும் பிரயத்தனத்தின் மத்தியில் கடற்படையினரின் உதவியுடன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து போட்டியில் பங்கேற்றார் என்று பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பாக பாடசாலை அதிபரிடம் தொடர்பு கொண்டு இது சம்பந்தமாக வினவியபோது, தீவகக் கல்வி வலயம் ஊடாக தமக்கு போட்டி பற்றிய தகவல் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் வினவ தீவக வலயப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டபோது, அழைப்பை ஏற்படுத்திய பின்னர் துண்டித்ததுடன், மீண்டும் அழைத்தபோது அழைப்பை ஏற்கமறுத்துள்ளார்.

வட மாகாணக் கல்விப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு குறித்த விடயம் தொடர்பில் கேட்ட போது, பாதிக்கப்பட்ட மாணவிக்கு வாய்ப்பு வழங்கும் வகையில் 9 மணிக்கு ஆரம்பிக்கப்படவிருந்த போட்டி 11 மணிக்கே தாமதமாக ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. நீண்ட அலைச்சலுக்கு மத்தியில் வந்திருந்த மாணவிக்குத் தேவையான உபசரணைகளும் வழங்கப்பட்டன- என்றார்.

சிறந்த திறனை வெளிப்படுத்திய மாணவியை அடுத்த கட்டப் போட்டிகளில் பங்கேற்க வைப்பதன் ஊடாக பெருமை சேர்ப்பிக்க வேண்டிய அதிகாரிகளே அசமந்தப் போக்காகச் செயற்பட்டமை தவறான முன்னுதாரணம் என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-100)

# மாமனிதர் குமாரசாமிஐயா மறைவு ஈழ இசைத்துறையில் பேரிடைவெளி

## சிறீதரன் எம்.பி.புகழஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 21

'ஈழத்தின் சீர்காழி' என்றழைக்கப்படும் மாமனிதர் குமாரசாமிஐயாவின் மறைவானது ஈழத்து இசைத்துறையில் ஒரு பேரிடைவெளியை ஏற்படுத்தியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

மறைந்த ஈழத்து இசையுலகின் முடிசூடா மன்னன், சங்கீதபூஷணம் செல்லத்துரை குமாரசாமியின் 31 ஆவது நினைவேந்தல் நிகழ்வும் நூல் வெளியீடும் அண்மையில் உடுப்பிட்டி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது நூலை வெளியிட்டுவைத்து நினைவுரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

கரவெட்டி மண்ணைப் பூர்வீகமாகக் கொண்ட மாமனிதர் குமாரசாமிஐயா இசைக்கலையின்பால் ஆர்வம் மிகுந்து அந்தத் துறை சார்ந்தே தனது கல்வி, தொழில், வாழ்க்கைமுறை என அத்தனையையும் கட்டமைத்திருந்தார். தமிழகம் சென்று முறையாக சங்கீதம் கற்றதோடன்றி தன் சொந்த மண்ணில் அக்கலையை முறையாக அரங்கேற்றம் செய்த பெருமைக்கும் உரியவர்.

மக்களின் தேசவிடுதலைக் கனவைச் சுமந்து நிகழ்ந்தேறிய போரின் தாற்பரியத்தை - அதன்பாலிருந்த நியாயத்தை- அடக்குமுறையாளர்களால் எமது மக்கள் எதிர்கொண்ட அவலங்களை - வெளிக்கொணர்ந்த 'தமிழீழ எழுச்சிப் பாடல்களின்' மறக்கவியலாத குரலாக குமாரசாமிஐயாவின் குரல் ஈழத்தமிழர்களின் மனங்களில் நிறைந்துள்ளது.

'பூத்தகொடி பூக்களின்றித் தவிக்கின்றது', 'போரம்மா உனையன்றி யாரம்மா' உள்ளிட்ட தேச விடுதலை எழுச்சிப் பாடல்களினது குரலுக்குச் சொந்தக்காரராகவும் யாழ்ப்பாணத்தின் பெருமளவு ஆலயங்களின் சிறப்பைப் பாடிய பக்திப் பாடல்களின் குரலாகவும் குமாரசாமி ஐயா விளங்குகிறார். அவரது மறைவானது ஈழத்து இசைத்துறையில் பேரிடைவெளியை ஏற்படுத்தியிருக்கிறது- என்றார். (ச-113)

# நடுக்கடலில் மீன்பிடித்த எம்மீது இலங்கை கடற்படை அச்சுறுத்து

## தமிழக மீனவர்கள் கொதிப்பு

எல்லை தாண்டாது நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த எம்மீது ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தி மிரட்டி விரட்டியடித்தனர் என்று இராமேஸ்வரம் மீனவர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

இராமேஸ்வரம் மீன்பிடித்துறைமுகத்தில் சுமார் 424 விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க கடந்த திங்கட் கிழமை கடலுக்குச்சென்றனர்.

தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே இராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அந்தப் பகுதிக்கு 10 க்கும் மேற்பட்ட அதிநவீன ரோந்துப் படகுகளில் வந்த இலங்கைக் கடற்படையினர், எல்லைதாண்டி மீன்பிடிப்பதாக ஒலிபெருக்கி மூலம் எச்சரித்தனர். இதனால் மீனவர்கள் அஞ்சி நடுக்கடலில் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது மீளவும் அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் எம்மை விரட்டியடித்ததுடன், வானத்தை நோக்கி துப்பாக்கியால் சூடு நடத்தி கைது செய்வதாகவும் மிரட்டினர். எமது வாழ்வாதாரத்தைப் பாதிக்கும்வகையில் இலங்கைக்கடற்படையினர் மேற்கொள்ளும் இந்த அடாவடித்தனம் ஏற்புடையதன்று. இதுவிடயத்தில் சம்பந்தப்பட்டோர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலியும் 31 ஆம் நாள் நினைவும்

தாய்மடியில் 26 • 05 • 1976



உறவுகள் நெகிழ 22 • 08 • 2023

## சண்முகநாதன் சயந்தன்

தையிட்டி தெற்கு, கணையவிற் பிள்ளையார் கோயில் ஆலய முகாமையாளரும். புனருத்தாரண சபை தலைவரும் (தையிட்டி தெற்கு, விக்கினேஸ்வரா வீதி) மேற்படி கோவில் முகாமையாளர் சண்முகநாதன் சயந்தனின் தந்தையாரின் மறைவின் பின் பதவி வழி முகாமையாளராக தெரிவுசெய்யப்படடார். தையிட்டி கிராமத்தின் பாரிய இடப்பெயர்வின் பின் சேதமாக்கப்பட்ட மேற்படி கோவிலை கிராமம் விடுவிக்கப்பட்டதன் பின்னர் மீளமைப்பதற்கு பாரிய அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். தையிட்டி கிராமத்தை மீள் எழுச்சியடைய செய்வதற்கு தனது முழு அர்ப்பணிப்பினை வழங்கினார். கிராம மக்கள் எல்லோரையும் அரவணைத்து மேற்படி கோயிலை புனரமைக்க ஆர்வத்துடன் செயற்பட்டார். கோவில் பணி முடிவடைந்த நிலையில் கும்பாவிஷேகம் நிறைவடைய முன்பு அவரது வாழ்வு அஸ்தமானமாகிவிட்டது.

**அவரது ஆன்மா சாந்தியடைய தையிட்டி கணையவிற் பிள்ளையார் துணைகொண்டு பிரார்த்திக்கின்றோம்.**


பிரிவால் துயருறும்

**தையிட்டி கணையவிற் பிள்ளையார் கோவில் புனருத்தாரண தொண்டர் சபை.**

(CS 52178) N.1

# மரண அறிவித்தல்

பிறப்பு 20 • 11 • 1933



இறப்பு 20 • 09 • 2023

## செல்லப்பா சுப்பிரமணியம் தியாகராசா

**( சாரதி - இலங்கை போக்குவரத்துச் சபை )**

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா சுப்பிரமணியம் தியாகராசா நேற்று (20.09.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சிவநாயகம் தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற சின்னத்தங்கச்சி (தேவி)யின் பாசமிகு கணவரும், ஜெயராசா (கனடா), காலஞ்சென்ற இரத்தினவல்லி, சர்வகுலராசா.மகேந்திரராசா மற்றும் சுந்தராசா, சிவராசா (கொலன்ட்) ஆகியோரின் சகோதரரும், சுசீலாதேவி (கனடா), ரவீந்தினி, லலிதா (ஜேர்மன்), விமலா (லண்டன்), சுமதி (ஜேர்மன்), ஜெயரூபி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2023) வியாழக்கிழமை அவரது சித்தன்கேணி இல்லத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(cr. 40604) (N-1)

# மணமகள் தேவை

1. சங்கானை, இந்து கௌரவகுலம் (K). 1992. விசாகம். BA(HONS) Accountant, uk citizen மணமகனுக்கு மணமகள் தேவை.8 இல் செவ்வாய் உள்ளது. - பதிவெண் - 34210
2. சுன்னாகம் - சாவகச்சேரி. இந்து கௌரவகுலம் (K). 1996. மிருகசீரிடம் BSc Engineering, Australia citizen மணமகனுக்கு மணமகள் தேவை. செய்வாய்க்குற்றம் இல்லை. பதிவெண் - 32933
3. காரைநகர்.இந்து கௌரவகுலம் (V). 1992. சித்திரை BSc in Engineering,system Engineer Singapure மணமகனுக்கு மணமகள் தேவை. செய்வாய்க்குற்றம் இல்லை. பதிவெண் - 34141
4. உடுப்பிட்டி. இந்து கௌரவகுலம் (V). 1990. அவிட்டம். BSc in Engineering, Newzealand citizen மணமகனுக்கு மணமகள் தேவை. 8 இல் செய்வாய் உள்ளது. பதிவெண் - 34184
5. பளை. இந்து கௌரவகுலம் (V). 1984. அவிட்டம்.PHD, UK citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. செய்வாய்க்குற்றம் இல்லை. பதிவெண் - 33058
6. காரைநகர். இந்து கௌரவகுலம் (V). 1986. சித்திரை. BSc, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. 1 இல் செய்வாய் உள்ளது. பதிவெண் - 27042
7. கரவெட்டி. இந்து கௌரவகுலம் (V). 1986. திருவோணம். BA (Hons),CIMA Complited, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. செய்வாய்க்குற்றம் இல்லை. பதிவெண் - 26504
8. நயினாதீவு. இந்து கௌரவகுலம் (V). 1981. ரோகினி. MSC, IT Consultant, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. 4 இல் செவ்வாய் உள்ளது. பதிவெண் - 25041

தொடர்புகளுக்கு- **S.Sharma J.P Astrologer** **Whatsapp - 077 803 8193** **Phone - 077 539 3728**

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## பகிரங்க ஏல விற்பனை

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையம். நீர்வேலியில் தரம் பிரிக்கப்பட்ட **இரும்பு, செப்பு, பித்தளை, அலுமினியம், கண்ணாடிப் போத்தல்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், சேதனப் பசளைகள், தார் பரல்கள், தடித்த கடதாசி மட்டைகள், ரயர்கள்** பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன.

- **காலம் :- 02.10.2023 திங்கட்கிழமை காலை 09.30 மணி**
- **இடம் :- தரம் பிரித்தல் நிலையம் நீர்வேலி.**

**நிபந்தனைகள்**

1. ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 5000.00 மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக செலுத்தி ஏல விற்பனையில் பங்குபற்றலாம்.
2. சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே தங்களால் கோரப்பட்ட ஏலத்தொகையின் முழுத் தொகையையும் செலுத்தி பொருட்களை தரம் பிரிக்கும் நிலையத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.
3. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**
**21.09.2023**

**தொடர்பு இலக்கம்**
**021 205 8865**
**021 205 8973**

(cr. ) (N.1)

# ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 19-09-1985

மறைவு 01-10-2014



## அமரர் சிவராசா நிசாந்த்

**திதி: வளர்பிறை பூர்வபட்ச சப்தமி (21.09.2023)**


எம் இனிய மகனே நீர் எம்மைவிட்டுச் சென்று
ஆண்டுகள் ஒன்பது ஆனதடா!
தேடுவதற்கு வளியில்லை இதுவே நியதியென நினைந்து இறைவன்
திருவடியில் இன்புற்றிருக்கவென வேண்டி மனம் ஆறுகின்றோம்.

**என்றும் உம் நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

**49/1 கோயில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 52180) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சந்தனமுதலிச்சிபுலம் முருகமூர்த்தி கோவில் பெருந்திருவிழாவின் தீர்த்தத் திருவிழாகடந்த 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ய-9)



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் விசேட வேலைத்திட்டத்தின் ஊடாக நெடுந்தீவு பிரதேசசபையின் பொது நூலகத்துக்கான ஒரு தொகுதி நூல்கள் கடந்த 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதேச செயலர் எவ். சி. சத்தியசோதியால் வழங்கப்பட்டன. (ய-9)



சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் அண்மையில் இடம்பெற்ற குங்குலியக்கலய நாயனார் குருபூசை நிகழ்வில் சொற்பொழிவை இளம் சைவப்புலவர் க.கயிலைவாசன் ஆற்றினார். மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் மாணவர்களுக்கு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ய)



பூமணி அம்மா அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவர் விசுவாசம் செல்வராசாவின் (பிரான்ஸ்) நெறிப்படுத்தலில் ஊர்காவற்றுறை பிரதேச பகுதியில் வசிக்கும் பொருண்மியம் நலிந்த 25 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக குடும்பம் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் கடந்த 14ஆம் திகதி திங்கட்கிழமை வழங்கப்பட்டன. (ய-20)



மாகாண மட்ட எறிபந்து போட்டியில் தேசிய மட்டத்துக்கு தெரிவான மாணவர்கள் கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் கடந்த 6ஆம் திகதி மதிப்பளிக்கப்பட்டனர். (ய-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்...

மாவட்டச்செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகச் சூழலில் போதைப்பொருள் பாவனையாளர்களும், விற்பனையாளர்களும் பொலிஸாரால் கைது செய்யப்படுகின்றனர்.

கைது செய்யப்படுபவர்களில் பல்கலைக்கழக மாணவர்களும் இருக்கின்றனர்.

மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்பனையாளர்கள் தங்கள் வியாபாரத்தை இலகுவாக மேற்கொள்கின்றனர்.

இதைக் கட்டுப்படுத்தத் தவறினால் இளம் சமூகம் போதைக்கு அடிமையாக மாறுவதைத் தடுக்க முடியாது என்று அந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம் வடமராட்சியில் உள்ள சில பாடசாலைகளில் மாணவர் வரவு வீழ்ச்சியடைந்துள்ளமைக்கும் போதைப்பொருளின் தாக்கமே காரணம் என்றும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலைகளில் ஆசிரியைகளே அதிகம் உள்ள நிலையில், பாடசாலைக்கு வராத மாணவர்களை மீண்டும் பாடசாலைக்கு அழைப்பதில் அவர்கள் நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (அ-எ-20)

தியாகதீபம்...

பம்பைமடு, வைரவப்புளியங்குளம், திருநாவற்குளம் உட்படப் பல இடங்கள் ஊடாக ஊர்தி பயணித்தது.

தியாகதீபம் திலீபனுக்கு வழிநெடுக மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தினர். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் தியாக தீபம் திலீபனை அஞ்சலித்தனர். (அ-எ-18,110)

இலங்கை...

பொலருக்கும் அதிகமான நிதியுதவியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான அபிவிருத்திக்கான உடன்படிக்கையின்படி, இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியுதவியானது இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஜனநாயக நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதாக அமையும் எனவும் இலங்கை மக்களுடனான நல்லுறவை மேம்படுத்துவதற்கு உதவும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-எ-இ)

# மாற்றுத்திறனாளிகள் சமூகத்தை பாதுகாப்பதற்கு புதிய சட்டவரைவு

நாட்டில் உள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக புதிய சட்டவரைவை நாடாளுமன்றத்தில் ஆண்டிறுதிக்குள் சமர்ப்பிக்கவுள்ளதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 4 சதவீதம் பேர் மாற்றுத்திறனாளிகளாக இருக்கின்றனர். தொழில்நுட்பம் மூலம் அவர்களை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்துக்கும் அவர்களின் பங்களிப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அவர்கள் எப்போதும் அரசாங்கத்தில் தங்கி வாழும் நிலையை மாற்ற வேண்டும். அவர்களை சமூக ரீதியாக வலுப்படுத்த அரசாங்கம் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாற்றுத்திறனாளிகளுக்காக சர்வதேச அளவிலான சுற்றுலா நிகழ்ச்சியொன்றை டிசெம்பர் மாதத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வழமையான சமூக நலன்புரி நன்மைகளுக்கு மேலதிகமாக, வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கல்வி உதவித்தொகையின் கீழ் இதுவரை வழங்கப்பட்டு வந்த 10 ஆயிரம் ரூபா உதவித்தொகை இந்த ஆண்டு முதல் 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கவும், சுயதொழில் உதவியாக வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவை 45 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீடமைப்புக் கொடுப்பனவு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஒ-26)

# ஆசியக்கிண்ணத் தொடரில் இலங்கை தடுமாறியது ஏன்?

## விசாரணைக்கு வலியுறுத்து

ஆசியக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் அணி விளையாடிய விதம் குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளது. கடும் தடுமாற்றத்தை இலங்கை அணி சந்தித்தது. இதுதொடர்பில் விசாரணை வேண்டும் என்று பொலிஸ் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை முறைப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடிகளுக்கான மக்கள் இயக்கம் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் ஜமுனி கமந்த துஷார கூறுகையில், ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

குறுகிய நேரத்துக்குள் அனைவரும் ஆட்டமிழந்து விட்டனர்.

இதனால் ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றுள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இந்தியாவுக்குப் இந்தப் போட்டி விட்டுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்ற ஐயமும் தோன்றியுள்ளது.

எனவே விசாரணை நடத்தி உண்மை தெளிவுபடுத்தப்பட வேண்டும் - என்றார். (ச-44)


வகுப்புக்கள்
தரம்: 1 - 03 வரையான வகுப்புகளும்,
6 - 9 வரையான வரலாறு மற்றும் குடியியல் பாட வகுப்புகளும் வீட்டில் கற்பிக்கப்படுவதோடு, நேரடியாக வந்தும் கற்பிக்கப்படும்.
074 179 3394

காணி விற்பனைக்கு
பருத்தித்துறை இருபாலை சந்தியிலிருந்து இருபாலை செல்லும் வீதியில் 700 மீ தூரத்தில் வீதியோரம் உள்ள 32 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
சு. சிவகுமார் - 077 181 5027
Whatsapp: + 491 575 471 0178
(cs.40603) (N.1)

யாழ்நகரில் காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் 3 1/2 பரப்புக் காணி இரண்டு வெட்டு கிணறுகளுடன் முழுமையாக உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குளி தாபல்நிலையத்திற்கு அருகாமையில் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ளது. எதிர்பாக்கப்படும் விலை 55 மில்லியனுக்கு மேலாக எதிர்பார்க்கப்படுகிறது.
தொடர்புகளுக்கு:
• Whatsapp : +447963743585
• மின்னஞ்சல் : jamesraj_uk@yahoo.co.uk
• Local Contact : 021 222 7141 (Srilanka)
(cs.52141) (N.1)

அகில இலங்கை D.A.M பட்டதாரிகள் வைத்திய சங்கம்
பொதுக் கூட்ட அறிவித்தல்
• காலம் : 04.10.2023 புதன்கிழமை முற்பகல் 11.00 மணி
• இடம் : சுன்னாகம் சிவன் கோவில் திருமண மண்டபம்
நீண்ட காலமாக செயற்படாமல் இருந்த இச் சங்கத்தினை, புதிய நிர்வாகத் தெரிவை நடத்தி, புதிய கட்டமைப்புடன் செயற்பட அனைத்து D.A.M வைத்தியர்களையும் ஒன்று கூடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்
(cs.52184) (N.1)
Dr. கணேசவேல் J.P.

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 20.11.1933

மறைவு 20.09.2023

எமது சித்தங்கேணி பத்திரிகை விற்பனை முகவர்

**செல்லப்பா சுப்பிரமணியம் தியாகராசா**

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன் குழுமத் தலைவரும், பணியாளர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளை வேரறுக்க கிராமத்திலிருந்து செயற்றிட்டம்

## முல்லை சிலாவத்தை இளைஞர்கள் முன்மாதிரி

**முல்லைத்தீவு, செப். 21**

**முல்லைத்தீவு, சிலாவத்தையைச் சேர்ந்த கிராமமக்கள் மற்றும் இளைஞர்கள் ஒன்றுதிரண்டு தமது கிராமத்தில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு சிவில் பாதுகாப்புக் குழு ஒன்றை அமைத்து நடவடிக்கை எடுத்துள்ளனர். அவர்களின் இந்த முன்மாதிரியான செயற்பாட்டை அனைவரும் வரவேற்றுள்ளனர்.**

தமது கிராமத்தில் போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் விளைவுகள், பாதிப்புகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளின் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை.

அந்தவகையில் குற்றங்களைத் தடுப்பதற்கு கிராமஅலுவலர் தலைமையில் முல்லைத்தீவு தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பங்குபற்றுதலுடன் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், விளையாட்டுக் கழகம் உள்ளிட்ட கிராம மட்டத்தில் உள்ள அமைப்புகள் மற்றும் கிராம மக்கள் மற்றும் இளைஞர்களை உள்ளடக்கி கிராமத்துக்கென சிவில் பாதுகாப்புக் குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவனையாளர்கள், போதைப்பொருள் விற்பனையாளர்கள், குற்றச்செயல்களில் ஈடுபடுவோரைக் கண்டறிந்து பொலிஸாரிடம் ஒப்படைத்து சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையிலான செயற்பாடுகளை இந்தக் குழு ஆரம்பித்துள்ளது.

குறித்த கிராம இளைஞர்களின் இந்த முன்மாதிரிச் செயற்பாடு பலராலும் வரவேற்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு கிராமமும் தமது கிராமத்தில் போதைப்பொருள் பாவனையைத் தடுப்பது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை தாமே எடுக்கவேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (ச-19)



## தகவல் அறியும் உரிமைச்சட்டம்
# விழிப்புணர்வு நிகழ்வு

*யாழ்ப்பாணம், செப் 21*

எதிர்வரும் 28 ஆம் திகதி கொண்டாடப் படவுள்ள சர்வதேச தகவல் அறியும் உரிமை தினத்தை முன்னிட்டு இலங்கை டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் நிறுவனத்தால் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த 18ஆம் திகதி திங்கட்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ய- 66)

## வவு. பல்கலையில்
# தமிழ்மொழி புறக்கணிப்பு வேதனைக்குரிய விடயம்!

*நாடாளுமன்றில் சார்ள்ஸ் எம்.பி. சுட்டிக்காட்டு*

வவுனியா, செப். 21

வவுனியா பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வின் பதாகையொன்றில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளமை தமிழ் மக்களுக்கு மன வேதனை தரும் விடயமாகும். இனிவரும் காலங்களில் இவ்வாறு நடைபெறாதிருக்க வழிவகுக்கவேண்டும். இவ்வாறு நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். தொடர்ந்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூவினத்தைச் சேர்ந்த மாணவர்களும் கல்விபயிலும் வவுனியா பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட வரவேற்புப் பதாகையில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது. சிங்களமொழிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலமொழியும் இணைக்கப்பட்டிருந்தது. இது தமிழ் மக்கள் மத்தியில் மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது- என்றார்.

இதற்குப் பதிலளித்த உயர்கல்வியமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, தமிழ்மொழி புறக்கணிப்புத் தொடர்பில் பல்கலைக்கழக உயரதிகாரிகளுடன் கலந்துரையாடி இனிமேல் இவ்வாறு நடைபெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-27)



# ஆசிரிய கலாசாலையில் நூற்றாண்டு சிறப்புரை

யாழ்ப்பாணம், செப். 21

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற நூற்றாண்டு கால சிறப்புரைத் தொடரில் கலாசாலையின் முன்னாள் உபஅதிபர் விஜயராணி வேலுப்பிள்ளை பங்கேற்றுசிறப்புரையாற்றினார்.

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வை கலாசாலையின் முதலாம் வருட ஆங்கில நெறிசார்ந்த ஆசிரிய மாணவர்கள் நெறிப்படுத்தினர்.

அதிதி அறிமுகவுரையை கலாசாலையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மேகிலா உமாசுதன் ஆற்றினார்.

நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்ட கலாசாலையின் முன்னாள் உபஅதிபர் விஜயராணி வேலுப்பிள்ளை கலாசாலைச் சமூகத்தினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ச)



# மயானம் துப்புரவாக்கல்

வலிகாமம் மேற்கு பிரதேசசபை, கொற்கைத்துறை இந்துமயான அபிவிருத்திச்சங்கம் மற்றும் சில புலம்பெயர் வட்டுக்கோட்டை உறவுகளும் இணைந்து வட்டுக்கோட்டை கொற்கைத்துறை(கொத்தன்துறை) இந்துமயானமும் மயான வீதியைப் புனரமைப்பு செய்து வருகின்றனர்.


இந்த மயானமானது வட்டு தென்மேற்கு, வட்டுதெற்கு, வட்டுமேற்கு, வட்டு வடக்கு, வட்டுகிழக்கு, அராலிமேற்கு மற்றும் சித்தன்கேணி வாழ் மக்களின் மரபுவழியாக பயன்பாட்டில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக இந்த மயானப்பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதனால் இந்த மயானமும் மயான வீதியும் பற்றைகளாகவும் மனிதர்களின் கழிவுகள் கொட்டும் இடமாகவும் மாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றது. கடலோடு அண்டிய இயற்கை வளம்பொருந்திய இந்து மயானத்தின் புனிதத்தைப் பேணுவது வட்டுக்கோட்டை வாழ் இந்து மக்களின் கடமையாகும் என ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (ய)

## யாழ்.போதனாவுக்கு
# மரண விசாரணை அதிகாரிகள் இருவர் நிரந்தரமாக நியமிப்பு

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்.போதனா மருத்துவமனைக்கு நிரந்தர திடீர் மரண விசாரணை அதிகாரிகள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனத்தை நீதியமைச்சு வழங்கியுள்ளது. வடமராட்சி திடீர் மரண விசாரணை அதிகாரியாகக் கடமையாற்றிய வின்சன்தயரன் அன்ரலா மற்றும் யாழ்.போதனா மருத்துவமனையில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் நமசிவாயம் பிறேம்குமார் ஆகியோரே யாழ்.போதனா மருத்துவமனைக்கு திடீர் மரண விசாரணை அதிகாரிகளாக நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-159)



கனடா செந்தில்குமரன் நிவாரண நிதியத்தின் நிதிப்பங்களிப்பில், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீ தரனால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திலீபன்...

திலீபனின் நினைவேந்தலைத் தடை செய்யக்கோரி யாழ்ப்பாணம் பொலிஸார் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தனர்.

தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரான திலீபன் என்பவரை நினைவு கூரும் செயற்பாடு இலங்கை சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி 1721/2 ஐயும், 2007ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான தேசிய ஒருமைப்பாடுகள் சட்டத்தையும் மீறுவதாகவும் உள்ளது என்றும், நடத்தப்படும் பேரணியை 1979ஆம் ஆண்டு 15ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கை முறைக்கோவைச் சட்டத்தின் கீழ் தடை செய்ய வேண்டும் என்றும் பொலிஸார் தங்களது மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

ஆறுபேரின் பெயர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டு, பொலிஸார் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று நடைபெற்றது. மனுவை ஆராய்ந்த நீதிவான் வழக்கைத் தள்ளுபடி செய்தார். (அ-எ-26,20,27)

## உயிர்த்த...

எடுக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்குத் தலைமை தாங்கிய சஹ்ரான் தொடர்பான சில காணொலிகள் எவ்வாறு கசிந்தன என்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் எந்தப் பொலிஸ் அதிகாரியும் குற்றவாளியாகக் குறிப்பிடப்படவில்லை. அவர்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பரிந்துரைகளே முன்வைக்கப்பட்டுள்ளன.

குற்றச்சாட்டுகளை முன்வைப்பது தொடர்பாக சட்டமா அதிபரே தீர்மானம் எடுத்துள்ளார். இந்தத் தாக்குதல் சம்பவங்களுக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்த்தன பொறுப்புக் கூறவேண்டும் என்று விசாரணை அறிக்கையில் எங்கும் குறிப்பிடவில்லை. உயர்நீதிமன்றமே அவரைக் குற்றவாளி என்று கண்டறிந்து, இழப்பீடு வழங்க உத்தரவிட்டுள்ளது - என்றார். (அ-எ-இ)

## துன்னாலையில்...

இந்தச் சம்பவம் துன்னாலை, வேம்படி பகுதியில் நேற்று வியாழக்கிழமை நடந்துள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

துன்னாலை தெற்கைச் சேர்ந்த 31 மற்றும் 50 வயதுடைய இருவரே தலை மற்றும் கால் பகுதிகளில் படுகாயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-100)

## விபத்தில்...

இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார். முட்டை ஏற்றி வந்த வாகனம் ஒன்றும், மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

மோட்டார் சைக்கிளில் பயணித்த அச்சுவேலி, பத்தமேனியைச் சேர்ந்த 36 வயது இளைஞர் ஒருவரே விபத்தில் படுகாயமடைந்துள்ளார்.

இவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-100)

## காணிப்...

யுள்ளோம். தமிழர் பிரதேசங்களில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடைமுறைச்சாத்தியமான எந்த நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்கவில்லை.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரதன தேரர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடந்த காடு பேணல் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மேய்ச்சல்தரைப் பிரச்சினை தீவிரமடைந்துள்ளது. அந்தப் பிரதேசங்களில் மந்தை மேய்ப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். காணி விடுவிப்புப் தொடர்பில் பேச்சில் ஈடுபடும் தரப்பினர் இந்த அடிப்படைப் பிரச்சினை தொடர்பில் அவதானம் செலுத்துவதில்லை.

முறையான மேய்ச்சல் தரை இல்லாததால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான மாடுகள், பசுக்கள் வனவளப் பாதுகாப்புக்கு உட்பட்ட பகுதிகளில் மேய்ச்சலில் ஈடுபடுகின்றன. அதனாலேயே சட்டவிரோதமான முறையில் மாடுகள் இறைச்சியாக்கப்படுவதும், கால்நடைகள் கொல்லப்படுவதும் சாதாரணமாகியுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படும் மேய்ச்சல்தரைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது அத்தியாவசியமானது.

காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நாங்கள் ஒருபோதும் தடையாக இருக்கவில்லை. ஆனால், இந்த அடிப்படைப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தேவையற்ற விடயங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது - என்றார். (அ-எ-இ)

## வெற்றுக்...

ஒன்று விதிக்கப்படவுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கான முன்மொழிவு அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படும் என்று சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்கோல் தெரிவித்தார்.

பெருந்தோட்ட நிறுவனங்கள் மற்றும் தனியாரிடம் பெருமளவான விவசாயக் காணிகள் விவசாய நடவடிக்கைகளுக்காக உட்படுத்தப்படாது இருக்கின்றன. அவற்றுக்கு விசேட வரி விதிக்கப்பட்டு, அதன்மூலம் கிடைக்கும் நிதியை விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-எ-இ)

## சுகாதாரத்துறை...

உறுப்பினர் மருத்துவர் ஜெயந்த பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேசிய விரோத தினமாக 22ஆம் திகதியை நாம் பிரகடனப்படுத்துவதுடன், அனைத்து மருத்துவமனைகளின் முன்பாகவும் இந்தப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

நாட்டு மக்களையும் சுகாதாரக் கட்டமைப்பையும் பாதுகாக்கும் நோக்கில் போராட்டங்களை நடத்த நாம் எதிர்பார்த்துள்ளோம். சுகாதார நிலைமைகள் எவ்வாறு உள்ளன என நாட்டு மக்களுக்குத் தெரியும். அவற்றுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக சுகாதார கட்டமைப்பிலுள்ள பிரச்சினைகளை எடுத்துக் கூறினோம். ஆனால், மக்களின் சுகாதாரம் தொடர்பில் அரசாங்கத்துக்குத் துளியளவும் அக்கறையில்லை. அரசியல்வாதிகளுக்கு இந்த மருத்துவமனைக் கட்டமைப்பு அவசியமில்லாவிட்டாலும், நாட்டு மக்களுக்கு இது அவசியமாகும் - என்றார்.

இலங்கை தொழிற்சங்க கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எஸ்.டி.மெதிவத்த இது தொடர்பாகத் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டு மக்கள், விவசாய, கல்விசார், சுகாதாரத்துறை மற்றும் நாட்டின் பல்வேறு துறைசார் தொழிற்சங்கங்களின் ஆதரவை இந்தப் போராட்டத்துக்கு வழங்க முன்வந்துள்ளன. மக்களின் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்காக அனைவரும் அரசாங்கத்தின் மோசமான செயற்பாடுகளுக்கு எதிராக அணி திரள வேண்டும் - என்றார். (அ-எ-இ)

## டிப்பர் மோதி...

டிப்பர் வாகனம் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து மன்னார், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கட்டைக்காடு, காட்டுப் புதுக்குடியிருப்பில் நேற்று மாலை நடந்துள்ளது.

நானாட்டான், ராசமடு சாளம்பனைச் சேர்ந்த ந.ஞானசேகரம் (வயது-55) என்பவரே உயிரிழந்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய டிப்பர் வாகனத்தின் சாரதியும், உதவியாளரும் சம்பவ இடத்தில் இருந்து தப்பியோடிய நிலையில், பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் உடல் மன்னார் மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை முருங்கன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-213)

## உளவு பார்க்க...

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐ.நா. சபையின் உபநிகழ்வாக நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சர்வதேச சமாதானம் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு வரவுள்ள சீனாவின் கப்பலால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று இந்தியா கடும் அதிருப்தி வெளியிட்டுவரும் நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரிட்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள கடல்சார் பாதுகாப்பு ஒப்பந்தம் சீன கப்பல்களின் வருகையைத் தவறாகப் புரிந்துவைத்துள்ளது. இலங்கை சீனாவின் கடன் பொறியில் சிக்கியுள்ளதால், சீனா இலங்கை மீது தனது ஆதிக்கத்தைச் செலுத்தும் என்று அந்த நாடுகள் நினைக்கின்றன எனக் கூறியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆனால், அது தவறு என்றும் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் சீன விஞ்ஞான ஆய்வு நிறுவனத்துடன் இலங்கைக் கடல்வள ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட ஒப்பந்தத்துக்கு அமையவே சீனக் கப்பல்கள் இலங்கைக்கு வந்து செல்கின்றன என்றும் அவர் விளக்கமளித்தார். (அ-எ-6)

## நாகப்பட்டினம்...

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து 60 கடல் மைல்கள் தொலைவில் உள்ள காங்கேசன் துறைமுகத்துக்குக் கப்பல் இயக்குவதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு கடல்சார் திணைக்களம், இந்திய மத்திய அரசின் துறைமுகங்கள், கப்பல், நீர்வழிப் போக்குவரத்துத்துறை, வெளியுறவுத்துறை மற்றும் தமிழக அரசு என்பன இணைந்து முன்னெடுக்கின்றன.

நாகப்பட்டினம் துறைமுக கால்வாய் தூர்வாருதல், பயணியர் முனையம் அமைப்பது போன்ற பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அவை பத்து நாள்களுக்குள் நிறைவுபெற்றுவிடும். ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதிக்குள் கப்பல் சேவையை ஆரம்பிக்க முடியும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார். (அ-எ-இ)

## மின்சாரசபை...

முன்னெடுக்கப்படும் என்ற தீர்மானம் இன்னமும் எடுக்கப்படவில்லை.

அரசாங்கம் நட்டமடையும் அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அதன் ஓர் அங்கமாக இலங்கை மின்சாரசபையை 14 பிரிவுகளாகப் பிரித்து, அவற்றைத் தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே தொழிற்சங்கப் போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஊழியர்களின் தொழிற்சங்கத் தலைவர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார். (அ-எ-இ)

## க.பொ.த. உயர்தரப்...

க.பொ.த. உயர்தரப்பரீட்சை தொடர்பாக நேற்றும், நேற்றுமுன்தினமும் நாடாளுமன்றத்தில் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியிருந்த நிலையில், அதற்குப் பதிலளித்தபோதே கல்வி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வியாழக்கிழமை(இன்று) நாடாளுமன்றில் இது தொடர்பான விசேட அறிவிப்பு வெளியிடப்படும் என்றும், அதன்பின்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்றும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சையை அடுத்து ஆண்டுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கோரியிருந்தனர்.

வடக்கு - கிழக்கு உட்பட கஷ்டப் பிரதேசங்களில் இன்னமும் பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாதுள்ளதால், பரீட்சையை நவம்பர் மாதம் நடத்துவது மாணவர்களுக்கு அநீதி இழைப்பதாக அமையும் என்று தெரிவித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், வேறு பல காரணங்களையும் சுட்டிக்காட்டியிருந்தனர். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆவணிவிநாயகர் சதுர்த்திவிரத உற்சவத்தினை முன்னிட்டு இணுவில் திருப்பதி வேங்கடவரர் தேவஸ்தானத்தால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பூஜைகள் வழிபாடுகள் இடம்பெற்றன. (ய-27)



கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்துக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேரின் வெள்ளோட்டம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (ச-17)

# தேவையெனில் சொல்லுங்கள் புலனாய்வாளர்களைத் தருகிறோம்

## சார்ள்ஸ் எம்.பி. நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, செப்.21

நாட்டின் பல இடங்களில் இன்று துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இதன் பின்புலம் தொடர்பாக உங்கள் புலனாய்வுப் பிரிவுக்கு கண்டுபிடிக்க முடியவில்லையெனில், எங்களிடம் திறமையான புலனாய்வாளர்கள் இருக்கின்றனர். அவர்களால் ஓரிரு நாள்களுக்குள் கண்டுபிடிக்கக்கூடியதாக இருக்கும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோது அதனைத் தடுத்து நிறுத்த பொலிஸார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? மேற்படி சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சபாநாயகர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதை ஏன் பொலிஸார் தடுக்கவில்லை என்ற கேள்வி எழுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர், பொலிஸாரின் முன்னிலையிலேயே தாக்கப்பட்டுள்ளார். எமது மக்கள்மீது இருக்கின்ற காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடே இது. இப்படியான சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இல்லையேல் நாளடைவில் கொடூரமான சம்பவங்கள் இடம்பெறக் கூடும்.

அதேபோல நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவை இலக்கு வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. யார் சுட்டார்கள், ஏன் சுட்டார்கள், துப்பாக்கி எங்கிருந்து வந்தது? இதற்கு பொலிஸ்துறை அமைச்சர் பதில்கூற வேண்டும்.

ஒன்று புலனாய்வுத்துறை வீழ்ச்சி யடைந்திருக்க வேண்டும், இல்லையேல் இப்படியான சம்பவங்களுக்கு ஆட்சியாளர்கள் துணைநிற்க வேண்டும்.

உங்களிடம் (அரசிடம்) சிறந்த புலனாய்வாளர்கள் இல்லை என்று சொன்னால், எங்களுடைய புலனாய்வாளர்களை உங்களுக்கு வழங்கத்தயாராக இருக்கின்றோம். சம்பவம் நடந்து இரண்டு, மூன்று நாள்களுக்குள் அவர்களால் பின்புலம் குறித்து கண்டுபிடிக்க முடியும். ஆனால் அதற்கான அனுமதி இல்லை. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள துப்பாக்கிச்சூட்டுக் கலாசாரத்துக்கு முடிவுகட்டப்பட வேண்டும் - என்றார். (எ-44)


### காணி விற்பனைக்கு

புத்தூரில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. புத்தூர் மீசாலை பிரதான வீதியில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km. 1 பரப்பு 5 லட்சம்.

077 8680 790

### வேலையாட்கள் தேவை

கல்வியங்காட்டில் இயங்கிவரும் பழ விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

பெண்கள் மற்றும் கல்வியங்காட்டை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 077 137 1617

### கட்டட இடிபாடு விற்பனைக்கு

யாழ். நாவலர் வீதியில் பழைய வீட்டு கட்டடம் ஒன்றினை இடித்து துப்பரவு செய்வதற்கு ஒப்பந்தகாரர்கள் தேவை.

தொடர்பு:-

071 186 2611

(CS 521498) A-1




பருத்தித்துறை வீதியில் வீதி அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான இருமருங்கிலுமுள்ள வாய்க்காலில் தேங்கி இருந்த கழிவு நீரை அகற்றும் செயற்பாடு கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பிரதேசசபையின் செயலாளர் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. (ய-159)


### காணி விற்பனைக்கு

திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கொக்குவில் செல்லும் வழியில் ஆடியபாத வீதியில் 200 மீற்றர் தூரத்தில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (CS.26317) N.1)

077 431 6132, 076 157 9443


யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் கடந்த 7ஆம் திகதி வியா ழக்கிழமை நடைபெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப்போட்டிகளில் 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் மன்னார் வலயத்துக்குட்பட்ட மன்னார் தோட்டவெளி ஜி.ரி.எம்.எஸ். மாணவி யு.யதுர்சிக்கா 10:15 மீற்றர் தூரம் எறிந்து சாதனையை நிலைநாட்டியுள்ளார். (ய-213)





### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் **90 பரப்பு (நிலப்பரப்பு)** விற்பனைக்கு உண்டு.

* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம் .
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் ( 300000/=)
* தரகர் தேவையில்லை

தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 076 0389

(CS 26250)M-1


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.